தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்
2.03.2013 A.M

## விவசாயிகளுக்கு உடனடியாக வறட்சி நிவாரண நிதியை வழங்க வேண்டும்

தமிழகம் முழுவதும், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண நிதியை உடனே வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர் உ. வாசுகி தெரிவித்தார்.

விருதுநகரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அகில இந்திய அளவில் 65 ஆண்டுகளாக அரசியலில் எந்த மாற்றமும் இல்லையென்பதை வலியுறுத்தி பிராசார இயக்கம் நடைபெற்று வருகிறது. இதில் கலந்து கொள்வதற்காக வந்த மத்தியக்குழு உறுப்பினர் உ. வாசுகி செய்தியாளர்களிடம் கூறியாதவது:

தற்போது, மாற்றுக் கொள்கைகளை பரப்பும் வகையில் குமரி முதல் சென்னை வரையில் ஒரு குழுவும், மும்பையில் ஒரு குழுவும், கொல்கத்தா மற்றும் அமிர்தசரஸில் இருந்து ஒரு குழுவும் பொதுமக்களை சந்தித்து இப்பிரச்னையை மையமாக வைத்து பிரசார பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 65 ஆண்டு காலமாக ஆட்சி செய்த நிலையிலும், பொதுமக்களின் அடிப்படை பிரச்னைகளைத் தீர்க்க முடியாமலும், எந்த மாற்றத்தையும் கொண்டு வராத நிலையே இருக்கிறது.

இந்தியாவில் கடந்த 15 ஆண்டுகளில் சுமார் 2.90 லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

விவசாயிகள் வறட்சியால் கடுமையாக பாதிக்கப்பட்டு, சாகுபடி செய்ய முடியாமல் நஷ்டமடைந்துள்ளனர். தமிழகத்தில் சென்னை தவிர்த்து அனைத்து மாவட்டங்களிலும் வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவித்து, உரிய நிவாரணம் வழங்குவதற்கு அரசு அறிவித்துள்ளது பாராட்டுக்குரியது. அதை குறிப்பிட்ட நேரத்தில் விவசாயிகளுக்கு வழங்கினால் தான் விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

இது போன்ற பல்வேறு கருத்துக்களை பொதுமக்களிடம் கொண்டு சென்று, மாற்றம் ஏற்படுத்துவதற்காகவே இப்பிரசார இயக்கம் மேற்கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

உடன் மாநிலக் குழு உறுப்பினர் எஸ். பாலசுப்பிரமணியம், மாவட்டச் செயலாளர் சேகர் ஆகியோர் உடனிருந்தனர்.

## தமிழகத்தில் 2025ல் 31 % அளவுக்கு தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படு

வரும் 2025-ஆம் ஆண்டில் 31 சதவிகித அளவுக்கு நீர்ப் பற்றாக்குறை ஏற்படும் என்று, வேளாண்மைத் துறை அமைச்சர் செ.தாமோதரன் தெரிவித்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மாநில அளவிலான விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க அதிகாரிகள் மாநாட்டை வேளாண்மைத் துறை அமைச்சர் செ.தாமோதரன் வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார்.

மாநாட்டில் வேளாண்மைத் துறை அமைச்சர் செ.தாமோதரன் பேசியது:

தேசிய மக்கள்தொகையில் 7 சதவிகிதத்தையும், சுமார் 49 லட்சம் ஹெக்டர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யும் விவசாயிகளையும், 91 சதவிகிதம் உள்ள குறு விவசாயிகளையும் தமிழகம் கொண்டுள்ளது. இவர்களைக் காப்பது அரசின் கடமையாகும்.

புதிய தொழில்நுட்பங்களும், புதிய ரகங்களும் கண்டுபிடிக்கப்பட வேண்டும். வேளாண் உற்பத்தியைப் பெருக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும்.

வருங்காலத்தில் நாம் சந்திக்க உள்ள பெரிய சவால் நீர்ப் பிரச்னை. தமிழகத்தைப் பொருத்த வரை 2025-ஆம் ஆண்டு கிடைக்கக்கூடிய நீரின் அளவு 4.74 மில்லியன் ஹெக்டர் மீட்டர் ஆகும். ஆனால், நீரின் தேவை 6.20 மில்லியன் ஹெக்டர் மீட்டராக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இதனால் 1.46 மில்லியன் ஹெக்டர் மீட்டர் அளவு நீர், அதாவது 31 சதவிகித அளவுக்கு நீர்ப் பற்றாக்குறை ஏற்படக் கூடும். இப்பிரச்னையை எதிர்கொள்ள இப்போதே ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் செயலர் சந்தீப் சக்சேனா பேசியது:

தமிழகத்தில் 2011- 12ஆம் ஆண்டில் வேளாண் பொருள் உற்பத்தி அதிகமாக இருந்தது. ஆனால், 2012- 2013ஆம் ஆண்டில் காவிரி நீர்ப் பிரச்னை மற்றும் போதிய மழை இல்லாதது போன்ற காரணங்களால் வேளாண் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இரண்டாவது பசுமைப் புரட்சிக்கு அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது. உணவு உற்பத்தியை 2 மடங்கும், விவசாயிகளின் வருமானத்தை 3 மடங்கும், வேளாண் வளர்ச்சியை 5 மடங்கும் உயர்த்துவதே இதன் இலக்காகும்.

மக்கள் தொகைப் பெருக்கம், விளைநிலங்களின் பயன்பாடு குறைவு போன்றவற்றால் பசுமைப் புரட்சி இலக்கை எட்டுவது பெரும் சவாலாக உள்ளது. மண் வளம் எதிர்காலத்தில் பெரிய பிரச்னையாக இருக்கும். மண் வளத்தைப் பாதுகாக்க போதிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தரும், மாநில திட்டக் குழு உறுப்பினருமான கு.ராமசாமி பேசியது:

சிறு குழந்தைகள் 40 சதவிகிதம் பேருக்கு போதிய சரிவிகித உணவு கிடைப்பதில்லை. ஊட்டச்சத்து மிகுந்த உணவு உற்பத்தியைப் பெருக்குவது அவசியம். பருவ நிலை மாற்றம் குறித்த ஆய்வு மேற்கொள்ள வேண்டும். ஆராய்ச்சிகளுக்கு போதிய நிதியை அரசு ஒதுக்க வேண்டும் என்றார்.

வேளாண்மைத் துறை ஆணையர் எம்.ராஜேந்திரன், வேளாண்மைத் துறை கூடுதல் செயலாளர் ஆர்.வாசுகி, வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத் துறை இயக்குநர் அனில் மேஷ்ராம், பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பிரிவு இயக்குநர் சந்திரசேகரன் உள்பட பலர் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்கு ஏமாற்றம் அளிக்கும் மத்திய பட்ஜெட்

மத்திய அரசு தாக்கல் செய்துள்ள பட்ஜெட் விவசாயிகள் வாழ்வில் ஏற்றம் அளிக்காமல் ஏமாற்றம் அளிப்பதாக கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சங்கத்தின் திருப்பூர் மாவட்ட தலைவர் ஏ. காளிமுத்து வெள்ளிக்கிழமை கூறியது:

பருவமழை பொய்த்து விவசாயமும், வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ள தமிழகத்தின் நிலையை முழுவதும் தெரிந்தவர் தமிழகத்தைச் சேர்ந்த மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம். அவர் தாக்கல் செய்துள்ள பட்ஜெட்டில் விவசாயிகள் கடன் தள்ளுபடி, வட்டி தள்ளுபடி உள்பட பல்வேறு சலுகைகளை எதிர்பார்த்து காத்திருந்தனர். ஆனால் எவ்வித அறிவிப்பும் இல்லாமல் மத்திய அரசு

விவசாயிகளை ஏமாற்றிவிட்டது. தமிழகத்தில் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதற்கு மத்திய அரசே காரணம். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள பல்வேறு கடன்களுக்கு குறைந்தபட்சம் வட்டித் தள்ளுபடியாவது அறிவித்திருக்க வேண்டும். தமிழகத்திற்கு அளிக்க வேண்டிய மின்சாரம் மற்றும் தண்ணீரையும் தராமல் சதி செய்கிறது. தமிழக முதல்வரின் முன்னோடியான திட்டங்களினாலேயே ஓரளவாவது பிரச்னைகளை சமாளிக்க முடிகிறது. தொடர்ந்து தமிழகத்தை புறக்கணித்து, பட்ஜெட்டில் விவசாயிகளை ஏமாற்றிய மத்திய அரசைக் கண்டித்து விரைவில் போராட்டம் நடத்தப்படும் என்றார்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 33.73 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 33.73 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 150 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 129 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.57 டி.எம்.சி.

## கோத்தகிரி பகுதி விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை அழைப்பு

கோத்தகிரி வட்டாரத்தில் தோட்டக்கலைத் துறை மூலமாக வழங்கப்படும் பொருள்களை இலவசமாகவும், மானிய விலையிலும் பெற்று விவசாயிகள் பயனடைய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கோத்தகிரி தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் ராஜேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை:

கோத்தகிரி வட்டாரத்தில் தோட்டக்கலைத் துறை மூலமாக 2012-13ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 50 சதவீத மானிய விலையில் தேயிலை நாற்றுகள், சில்வர் ஓக் மர நாற்றுகள், பழச் செடிகள், கிராம்பு, ஜாதிக்காய் போன்ற வாசனை திரவிய பயிர் நாற்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 50 சதவீத மானிய விலையில் காய்கறி விதைகள், 25 சதவீத மானியத்தில் பவர் டில்லர், மினி டிராக்டர் மற்றும் விவசாயக் கருவிகளான மண்வெட்டி, கடப்பாறை போன்ற பொருள்களும் வழங்கப்படுகின்றன.

தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் உயர் தொழில்நுட்ப பசுமைக் குடில்கள் அமைப்பதற்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. தேசிய நுண்நீர் பாசன திட்டத்தின்கீழ் காய்கறி பயிர் செய்யும் விவசாயிகளுக்கு முழு மானிய விலையில் தெளிப்பு நீர்ப் பாசனக் கருவிகளும் வழங்கப்படுகின்றன.

மேலும் விவரங்களுக்கு கோத்தகிரி தோட்டக் கலைத் துறை உதவி இயக்குநரை தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கால்நடை வளர்ப்புடன் கூடிய விவசாயமே எதிர்காலத்துக்கு சிறந்தது

கால்நடை வளர்ப்புடன் கூடிய விவசாயமே எதிர்காலத்துக்கு சிறந்தது என தேயிலை வாரியச் செயல் இயக்குநர் ஆர்.அம்பலவாணன் கூறினார்.

உதகையில் பண்ணை புதுமையாளர் விருது வழங்கும் விழாவில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. உதகை மத்திய மண் மற்றும் நீர்வள ஆராய்ச்சி மையத்தின் சார்பில் நடைபெற்ற இவ் விழாவிற்கு ஆராய்ச்சி மையத் தலைவர் ஓ.பி.எஸ்.கோலா தலைமைவகித்தார். சிறப்பு விருந்தினராக பங்கேற்று, தேயிலை வாரியச் செயல் இயக்குநர் ஆர்.அம்பலவாணன் பேசியது:

கடந்த 1990-ம் ஆண்டுக்கு பிறகு, தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. முன்பெல்லாம் விவசாயம் சார்ந்த தொழில்களே அதிகளவில் இருந்தன. ஆனால், தொழில்துறையின் வளர்ச்சிக்கு ஏற்ப தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துவிட்டது. இதைத் தடுக்க முடியாது. அதனால் தொழில்துறையால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும்.

தொழில்துறையின் வளர்ச்சியின் காரணமாக விவசாய நிலங்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் புகை மற்றும் ரசாயனக் கழிவுகளால் நீர் மற்றும் நிலம் பெரிதும் மாசடைகிறது. நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டங்களை அழித்து வணிக ரீதியிலான ரிசார்ட்டுகளை அமைப்பதும், குடியிருப்பு பகுதிகளாக மாற்றுவதும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

விவசாயத்துறையின் ஆராய்ச்சிகளின் பயன்கள் வசதி படைத்தவர்களுக்கு மட்டுமின்றி சிறு விவசாயிகளுக்கும் கிடைக்க வேண்டும். படித்த இளைஞர்கள் தற்போது விவசாயத் துறைக்கு வருவதில்லை. இந் நிலை மாற வேண்டும். கடந்த காலங்களில் கால்நடைகளை வளர்த்து அவற்றின் கழிவுகளையே உரமாக பயன்படுத்தி வந்தனர். அத்தகைய நிலை தற்போது

நடைமுறையில் இல்லை. இதை மாற்றி கால்நடை வளர்ப்புடன கூடிய விவசாயத்தை உருவாக்க வேண்டும். இதுவே எதிர்காலத்துக்கு ஏற்ற சிறந்த திட்டம் என்றார்.

விழாவில் பண்ணை புதுமையாளர் விருதுகள் தொட்டண்ணி பகுதியைச் சேர்ந்த சுலைமான், மேல்கவ்வட்டி பகுதியைச் சேர்ந்த ஷெட்டி, மகேந்திரன் ஆகியோருக்கு வழங்கப்பட்டன.

## நீலகிரி மாவட்ட அணைகளில் குறையும் நீர்மட்டம்-

நீலகிரி மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சி காரணமாக அணைகளில் நீர்மட்டம் குறைந்து வருவதால் மின் உற்பத்தி செய்வதில் சிக்கல் ஏற்படும் அபாயம் நிலவுகிறது.

நீலகிரி மாவட்டத்தில் குந்தா நீர்மின் திட்டம், பைக்காரா மோயார் நீர்மின் திட்டத் தில் குந்தா, கெத்தை, பரளி, பில்லூர், அவலாஞ்சி, மோயார், பைக்காரா உள்ளிட்ட 12 மின் நிலையங்கள் மூலமாக 833 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

அப்பர்பவானி, அவலாஞ்சி, எமரால்டு, குந்தா, கெத்தை, பில்லூர், பார்சன்ஸ்வேலி, போர்த்தி உள்ளிட்ட 14 அணைகளில் கிடைக்கும் நீரைக் கொண்டு மேற்படி மின் நிலையங்களில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததால், அணைகளின் நீர் வரத்துக்கு முக்கியக் காரணமாக இருக்கும் வெட்ஸ்டர்ன் கேட்ச்மெண்ட்-1, 2, 3, லோன்வேலி-1, 2, சாண்டிநள்ளா, மேல்கோடுமந்து உள்ளிட்ட நீராதாரங்களில் தண்ணீர் வரத்து குறைந்துவிட்டது. இதனால், அணைகளின் நீர்மட்டமும் வெகுவாக குறைந்து வருகிறது.

இதே நிலை நீடித்தால் வரும் கோடைகாலத்தில் அணைகளின் நீர் இருப்பு குறைந்து மின் உற்பத்தியில் சிக்கல் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. வெள்ளிக்கிழமை நிலவரப்படி அணைகளின் நீர் இருப்பு விவரம்: (அடைப்புக்குள் அணையின் முழுக் கொள்ளளவு)

முக்குருத்தி-51.5 அடி (78), பைக்காரா-57.1 (89), சாண்டிநள்ளா- 21.7 அடி (49), கிளண்மார்கன்-138 (142), மரவக்கண்டி- 25 (28), மோயார்- 16.1 அடி (17), அப்பர்பவானி- 183.3 (210), பார்சன்ஸ்வேலி- 60 (77), போர்த்தி- 88.8 (130), அவலாஞ்சி- 103.1 அடி (171), எமரால்டு- 117.1 (184), குந்தா-85.5 (89), கெத்தை-149.5 (156), பில்லூர்-226 அடி (242).

பெரும்பாலான அணைகளில் நீர்மட்டம் பாதியாக குறைந்துள்ள நிலையில் சில அணைகளில் நீர் இருப்பு தேவையான அளவுக்கு இருப்பதாகத் தெரிந்தாலும் உண்மை யில் நீர் இருப்பு குறைவாகவே உள்ளது. மாவட்டத்தில் உள்ள அனைத்து அணைக ளும் கட்டப்பட்டு பல

வருடங்களானதால் பெருமளவு சேறும், சகதியும் நிரம்பியுள்ளது. இதனால், மழைக் காலங்களில் நீர்வரத்து அதிகரிக்கும்போது அணையில் நீரைத் தேக்கிவைக்க முடியாமல் திறந்துவிடப்படுகிறது.

இதனால், கோடைக்காலங்களில் போதிய நீர் இருப்பு இல்லாமல் மின் உற்பத்தி பாதிக்கப்படுவது வழக்கமாகி விட்டது.

மாவட்டத்தில் உள்ள அணைகளைத் தூர்வார நடவடிக்கை எடுத்தால் மட்டுமே முழுக் கொள்ளவுக்கு நீரைத் தேக்கி சிக்கல் இல்லாமல் மின் உற்பத்தி செய்ய முடியும் என, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தொரப்பள்ளியில் விவசாயிகள் குறைதீர் முகாம்

கூடலூர் தொரப்பள்ளி பகுதியில் விவசாயிகள் குறைதீர் முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

தொரப்பள்ளி குனியல் கிராமத்தில் யூகோ வங்கி சார்பில் நடைபெற்ற சிறப்பு முகாமில், வங்கியில் பெற்ற கடன்களை விவசாயிகள் திருப்பிச் செலுத்தாமல் இருக்கும் காரணங்கள் குறித்து விவசாயிகளிடம் கேட்டறியப்பட்டது.

இதைத் தொடர்ந்து, அனைத்து கடன்களையும் சரியான முறையில் திருப்பிச் செலுத்துமாறு வங்கி அதிகாரிகள் விவசாயிகளை அறிவுறுத்தினர்.

புதிய விவசாயக் கடன்களை பெறும் வழிமுறைகள் குறித்து விளக்கம் அளித்தனர். இதைத் தொடர்ந்து, விவசாயிகளுக்கு கடன் அட்டைகள் வழங்கப்பட்டன. விவசாயத்துக்கு 7 சதவீத வட்டியுடன் கடன் வழங்கப்படுகிறது என்றும், யூகோ வங்கியில் எளிய முறையில் கடன் பெற முடியும் என்றும் வங்கி மேலாளர் ஈ.முருகேசன் கூறினார்.முகாமிற்கு விவசாயிகள் சங்கத் தலைவர் விஸ்வநாதன் தலைமை வகித்தார். முதுமலை ஊராட்சி உறுப்பினர் ஏ.நாராயணன், ஸ்ரீ மதுரை ஊராட்சி உறுப்பினர் சுனில் உள்பட 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## முட்டைக் கொள்முதல் விலை 10 காசுகள் குறைந்தது

நாமக்கல்லில் முட்டைக் கொள்முதல் விலை வியாழக்கிழமை 10 காசுகள் குறைக்கப்பட்டு ரூ.3.75 ஆக நிர்ணயிக்கப்பட்டது.

தீவன விலை உயர்வு காரணமாகவும், முட்டை தேவைப்பாடு அதிகரித்ததாலும் விற்பனை உயர்ந்தது. இதனால், முட்டைக் கொள்முதல் விலை வரலாறு காணாத அளவில் உயர்ந்தது. நாமக்கல் மண்டலத்தில் கடந்த பிப்ரவரி 11-ஆம் தேதி ரூ.3.70-ஆக இருந்த முட்டை பண்ணைக்

கொள்முதல் விலை படிப்படியாக உயர்ந்து பிப்ரவரி 25-ஆம் தேதி ரூ.3.85-ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், தற்போது நிலவும் கோடை வெயில், விலை உயர்வு ஆகியவற்றால் முட்டை தேவைப்பாடு குறைந்தது. இதையடுத்து, முட்டை விற்பனையும் குறைந்ததால், விலையைக் குறைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. வியாழக்கிழமை 10 காசுகள் குறைக்கப்பட்டு ரூ.3.75-ஆக நிர்ணயிக்கப்பட்டதாக தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்தது.

பிற மண்டலங்களில் முட்டை விலை: சென்னை -ரூ.3.81, பெங்களூர் -ரூ.3.75, மைசூர் -ரூ.3.79, ஹைதராபாத் -ரூ.3.50, மும்பை -ரூ.3.82, விஜயவாடா -ரூ.3.50, கொல்கத்தா -ரூ.3.80, பர்வாலா -ரூ.3.44, தில்லி -ரூ.3.65.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 31.32 அடி

மேட்டூர் அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 31.32 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 195 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்து. அணையிலிருந்து வினாடிக்கு 6,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## "பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்கப்படும்'

வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க முதல்வர் ஜெயலலிதா நடவடிக்கை எடுத்துள்ளார் என்றார் அதிமுக மாநில விவசாயப் பிரிவு செயலர் கு. தங்கமுத்து.

பூதலூர் ஒன்றிய மற்றும் திருக்காட்டுப்பள்ளி நகர அதிமுக சார்பில் நடைபெற்ற முதல்வர் ஜெயலலிதா பிறந்த நாள் பொதுக்கூட்டம் மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் அவர் பேசியது: காவிரியில் தண்ணீர் இல்லாததால் டெல்டா மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் சம்பா மகசூல் குறைந்துள்ளது. பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு முதல்வர் ஜெயலலிதா ஏக்கருக்கு ரூ.15,000 நிவாரணம் அறிவித்துள்ளார். இந்த நிவாரணம் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் வழங்கப்படும். காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடப் போராடியவர் முதல்வர் ஜெயலலிதா. இதனை பாராட்டும் வகையில், தஞ்சாவூரில் மார்ச் 7-ல் விழா நடைபெறுகிறது. இதில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றார் தங்கமுத்து. விழாவில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் எம். ரெத்தினசாமி, எம். ரெங்கசாமி, சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் எம்.ஜி.எம். சுப்பிரமணியன், பூதலூர் ஒன்றியக் குழுத் தலைவர் மணிமேகலை, நகர அவைத் தலைவர் சி. கோவிந்தராஜன், எம்ஜிஆர் மன்றச் செயலர் வி. ராஜாங்கம், பேரூராட்சித் தலைவர் மங்கையர்கரசி, நகரச் செயலர் எம்பிஎஸ் ராஜேந்திரன்

உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

விழாவில், பொதுத்தேர்வில் முதல் மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் வேட்டி சேலை, தையல் இயந்திரம், சலவைப்பெட்டி, பாத்திரங்கள், மாணவர்களுக்கு எழுதுபொருள்கள் வழங்கப்பட்டன.

## நீலகிரி மாவட்ட அணைகளில் குறையும் நீர்மட்டம்: மின் உற்பத்தியில் சிக்கல் ஏற்படும்

நீலகிரி மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சி காரணமாக அணைகளில் நீர்மட்டம் குறைந்து வருவதால் மின் உற்பத்தி செய்வதில் சிக்கல் ஏற்படும் அபாயம் நிலவுகிறது.

நீலகிரி மாவட்டத்தில் குந்தா நீர்மின் திட்டம், பைக்காரா மோயார் நீர்மின் திட்டத் தில் குந்தா, கெத்தை, பரளி, பில்லூர், அவலாஞ்சி, மோயார், பைக்காரா உள்ளிட்ட 12 மின் நிலையங்கள் மூலமாக 833 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

அப்பர்பவானி, அவலாஞ்சி, எமரால்டு, குந்தா, கெத்தை, பில்லூர், பார்சன்ஸ்வேலி, போர்த்தி உள்ளிட்ட 14 அணைகளில் கிடைக்கும் நீரைக் கொண்டு மேற்படி மின் நிலையங்களில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததால், அணைகளின் நீர் வரத்துக்கு முக்கியக் காரணமாக இருக்கும் வெட்ஸ்டர்ன் கேட்ச்மெண்ட்-1, 2, 3, லோன்வேலி-1, 2, சாண்டிநள்ளா, மேல்கோடுமந்து உள்ளிட்ட நீராதாரங்களில் தண்ணீர் வரத்து குறைந்துவிட்டது. இதனால், அணைகளின் நீர்மட்டமும் வெகுவாக குறைந்து வருகிறது.

இதே நிலை நீடித்தால் வரும் கோடைகாலத்தில் அணைகளின் நீர் இருப்பு குறைந்து மின் உற்பத்தியில் சிக்கல் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. வெள்ளிக்கிழமை நிலவரப்படி அணைகளின் நீர் இருப்பு விவரம்: (அடைப்புக்குள் அணையின் முழுக் கொள்ளளவு)

முக்குருத்தி-51.5 அடி (78), பைக்காரா-57.1 (89), சாண்டிநள்ளா- 21.7 அடி (49), கிளண்மார்கன்-138 (142), மரவக்கண்டி- 25 (28), மோயார்- 16.1 அடி (17), அப்பர்பவானி- 183.3 (210), பார்சன்ஸ்வேலி- 60 (77), போர்த்தி- 88.8 (130), அவலாஞ்சி- 103.1 அடி (171), எமரால்டு- 117.1 (184), குந்தா-85.5 (89), கெத்தை-149.5 (156), பில்லூர்-226 அடி (242).

பெரும்பாலான அணைகளில் நீர்மட்டம் பாதியாக குறைந்துள்ள நிலையில் சில அணைகளில் நீர் இருப்பு தேவையான அளவுக்கு இருப்பதாகத் தெரிந்தாலும் உண்மை யில் நீர் இருப்பு குறைவாகவே உள்ளது. மாவட்டத்தில் உள்ள அனைத்து அணைக ளும் கட்டப்பட்டு பல வருடங்களானதால் பெருமளவு சேறும், சகதியும் நிரம்பியுள்ளது. இதனால், மழைக் காலங்களில் நீர்வரத்து அதிகரிக்கும்போது அணையில் நீரைத் தேக்கிவைக்க முடியாமல் திறந்துவிடப்படுகிறது.

இதனால், கோடைக்காலங்களில் போதிய நீர் இருப்பு இல்லாமல் மின் உற்பத்தி பாதிக்கப்படுவது

வழக்கமாகி விட்டது.

மாவட்டத்தில் உள்ள அணைகளைத் தூர்வார நடவடிக்கை எடுத்தால் மட்டுமே முழுக் கொள்ளவுக்கு நீரைத் தேக்கி சிக்கல் இல்லாமல் மின் உற்பத்தி செய்ய முடியும் என, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## மேட்டூர் நீர்மட்டம் 2 நாளில் 2.26 அடி குறைந்தது

மேட்டூரிலிருந்து வினாடிக்கு 6 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்படுவதால், அணையின் நீர்மட்டம் 2 நாளில் 2.26 அடி குறைந்தது.

காவிரி டெல்டா மாவட்டங்களில் நெல் சாகுபடி முடிவடைந்ததும், ஆண்டுதோறும் ஜனவரி 28ஆம் தேதி அணையிலிருந்து பாசனத் தேவைக்காகத் தண்ணீர் திறக்கப்படுவது நிறுத்தப்படும். இதையடுத்து, குடிநீர்த் தேவைக்காக மட்டுமே அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படும்.

இந்த நிலையில், நிகழாண்டு காவிரி டெல்டா மாவட்டங்களில் நெல் சாகுபடி முடிந்த நிலையில், அணையிலிருந்து புதன்கிழமை முதல் வினாடிக்கு 6 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 324 கன அடியாக உள்ள நிலையில், அணையிலிருந்து கூடுதலாகத் தண்ணீர் திறக்கப்பட்டதால், புதன்கிழமை 33.99 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், வியாழக்கிழமை 32.91 அடியாகவும், வெள்ளிக்கிழமை 31.73 அடியாகவும் குறைந்தது.

அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்ட 2 நாள்களில் நீர்மட்டம் 2.26 அடி குறைந்தது. தற்போது அணையின் நீர் இருப்பு 8.23 டிஎம்சியாக உள்ளது.

## மேட்டூர்  நீர்மட்டம் 2 நாளில் 2.26 அடி குறைந்தது



மேட்டூரிலிருந்து வினாடிக்கு 6 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்படுவதால், அணையின் நீர்மட்டம் 2 நாளில் 2.26 அடி குறைந்தது.

காவிரி டெல்டா மாவட்டங்களில் நெல் சாகுபடி முடிவடைந்ததும், ஆண்டுதோறும் ஜனவரி 28ஆம் தேதி அணையிலிருந்து பாசனத் தேவைக்காகத் தண்ணீர் திறக்கப்படுவது நிறுத்தப்படும். இதையடுத்து, குடிநீர்த் தேவைக்காக மட்டுமே அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படும்.

இந்த நிலையில், நிகழாண்டு காவிரி டெல்டா மாவட்டங்களில் நெல் சாகுபடி முடிந்த நிலையில், அணையிலிருந்து புதன்கிழமை முதல் வினாடிக்கு 6 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 324 கன அடியாக உள்ள நிலையில், அணையிலிருந்து கூடுதலாகத் தண்ணீர் திறக்கப்பட்டதால், புதன்கிழமை 33.99 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், வியாழக்கிழமை 32.91 அடியாகவும், வெள்ளிக்கிழமை 31.73 அடியாகவும் குறைந்தது. அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்ட 2 நாள்களில் நீர்மட்டம் 2.26 அடி குறைந்தது. தற்போது அணையின் நீர் இருப்பு 8.23 டிஎம்சியாக உள்ளது.

## கோத்தகிரி பகுதி விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை அழைப்பு

கோத்தகிரி வட்டாரத்தில் தோட்டக்கலைத் துறை மூலமாக வழங்கப்படும் பொருள்களை இலவசமாகவும், மானிய விலையிலும் பெற்று விவசாயிகள் பயனடைய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கோத்தகிரி தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் ராஜேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை:

கோத்தகிரி வட்டாரத்தில் தோட்டக்கலைத் துறை மூலமாக 2012-13ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 50 சதவீத மானிய விலையில் தேயிலை நாற்றுகள், சில்வர் ஓக் மர நாற்றுகள், பழச் செடிகள், கிராம்பு, ஜாதிக்காய் போன்ற வாசனை திரவிய பயிர் நாற்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 50 சதவீத மானிய விலையில் காய்கறி விதைகள், 25 சதவீத மானியத்தில் பவர் டில்லர், மினி டிராக்டர் மற்றும் விவசாயக் கருவிகளான மண்வெட்டி, கடப்பாறை போன்ற பொருள்களும் வழங்கப்படுகின்றன.

தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் உயர் தொழில்நுட்ப பசுமைக் குடில்கள் அமைப்பதற்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. தேசிய நுண்நீர் பாசன திட்டத்தின்கீழ் காய்கறி பயிர் செய்யும் விவசாயிகளுக்கு முழு மானிய விலையில் தெளிப்பு நீர்ப் பாசனக் கருவிகளும் வழங்கப்படுகின்றன.

மேலும் விவரங்களுக்கு கோத்தகிரி தோட்டக் கலைத் துறை உதவி இயக்குநரை தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

2.03.2013 A.M

## வேலை உறுதி திட்டம் : தேர்வான விவசாய பணிகளுக்கு அனுமதி இல்லாததால் அதிரு

பொள்ளாச்சி:வேலை உறுதி திட்டத்தில், தேர்வு செய்யப்பட்ட விவசாய பணிகளுக்கு நிர்வாக அனுமதி கிடைக்காததால், பணிகளை துவங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், சிறு, குறு விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர்.ஊராட்சிகளில், வேலை இல்லாத மக்களுக்கு ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை கிடைக்கும் வகையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தால், விவசாய கூலி தொழிலுக்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால், தனிநபர் நிலமேம்பாட்டு பணியை இத்திட்டத்தில் இணைத்து அரசு உத்தரவு வழங்கியது.

இதற்காக, ஊராட்சி வாரியாக வறுமை கோட்டுக்கு கீழுள்ள சிறு, குறு விவசாயிகள் குறித்த பட்டியல் தயாரிக்கப்பட்டது. வேளாண் துறை அதிகாரிகள் மூலம் விவசாய நிலங்களில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த பட்டியல் பெறப்பட்டது. ஜன., மாதம் அனைத்து விவசாயிகளிடம் இருந்தும் பட்டியல் பெறப்பட்டு, குடியரசு தினத்தில் நடந்த கிராம சபை கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.

இறுதி செய்த பணிகள் குறித்த விபரங்கள், ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகள் மூலம் நிர்வாக அனுமதி பெற அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், ஒரு மாதம் நிறைவடைந்த நிலையிலும், இதுவரை நிலமேம்பாட்டு பணியை துவங்க இதுவரை ஒப்புதல் கிடைக்கவில்லை. இதனால், தற்காலிகமாக இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

ஊராட்சிகளில், வழக்கமாக மேற்கொள்ளப்படும் குளம், குட்டை தூர்வாருதல், மண் சாலை அமைத்தல், மயான மேம்பாடு உள்ளிட்ட பணிகளே மேற்கொள்ளப்படுகிறது. பல ஊராட்சிகளில் இப்பணி முழுமையாக நிறைவடைந்துள்ளதால், பயனாளிகளுக்கு பணியை அளவீடு செய்து வழங்க முடியாமல் அதிகாரிகள் தவிப்புக்குள்ளாகியுள்ளனர்.

தற்போதுள்ள பயனாளிகளே, பணி இன்றி உள்ள நிலையில், ஏற்கனவே, 100 நாட்கள் நிறைவு செய்த பயனாளிகளுக்கு கூடுதலாக மார்ச் 31ம் தேதி வரை 50 நாட்கள் பணி வழங்கியுள்ளதால், அரசின் நிதி வீணாகும் வாய்ப்புள்ளதாக, மக்கள் கருத்து தெரிவிக்கின்றனர். எனவே, பருவ மழை துவங்குவதற்கு முன்னதாக, நிலமேம்பாட்டு பணியை துவங்க அனைத்து பயனாளிகளுக்கும் பணி வழங்க வேண்டும், என்ற கோரிக்கை எழுந்துள்ளது.ஒன்றிய அதிகாரிகள் கூறுகையில், "கிராம சபை மூலம் தேர்வு செய்த விவசாய பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்குவதில், ஒரு சில நடைமுறை சிக்கல் உள்ளதால், இதுவரை வழங்கப்படவில்லை. மேலும், விவசாய பணியை துவங்குவது குறித்த அறிவிப்பு தமிழக பட்ஜெட்டில் அறிவிக்கும் வாய்ப்புள்ளதாக தெரிகிறது. வரும் ஏப்., மாதத்துக்குள் பணி துவங்க நிர்வாக அனுமதி கிடைக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. அறிவிப்பு வந்தவுடன், உடனடியாக பணி துவங்கப்படும். அதுவரை, வழக்கமான பணிகள் மட்டும் மேற்கொள்ளப்படும்,' என்றனர்.

**ஏலக்காய் ஏற்றுமதி 50 சதவீதம் சரிவடையும்**

கொச்சி:நடப்பாண்டில், நாட்டின் ஏலக்காய் ஏற்றுமதி, 50 சதவீதம் சரிவடையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. கவுதமாலாஉள்நாட்டில் ஏலக்காய் உற்பத்தியில், சரிவு நிலை காணப்படுகிறது. அதேசமயம், கவுதமாலாவில் இதன் விளைச்சல் சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது. இது, போன்ற காரணங்களால், நடப்பாண்டில், இதன் ஏற்றுமதி, 50 சதவீதம் சரிவடையும் என, தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்ற, நவம்பருடன் முடிவடைந்த, எட்டு மாத காலத்தில், இந்தியாவின் ஏலக்காய் ஏற்றுமதி, 1,250 டன்னை எட்டியுள்ளது. இது, இதற்கு முந்தைய 2011ம் ஆண்டு இதே காலத்தில், மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட, 60 சதவீதம் சரிவாகும். சென்ற 2011-12ம் ஆண்டில், முன் எப்போதும் இல்லாத அளவாக, ஏலக்காய் ஏற்றுமதி, 4,650 டன்னை எட்டியது.இந்திய ஏலக்காய்க்கு, மத்திய கிழக்கு நாடுகளில் வரவேற்பு உள்ளது. அதேசமயம், வளைகுடா நாடுகளுக்கு, கவுதமாலாவின் இரண்டாம் ரக ஏலக்காய், மலிவு விலையில், அதிகமாக ஏற்றுமதியாவதால், இந்நாடுகளுக்கான ஏற்றுமதி வெகுவாக குறைந்துள்ளது.சர்வதேச சந்தையில், இந்தியாவின் உயர் ரக ஏலக்காய் ஒரு கிலோ, 18 டாலராக உள்ளது. அதேசமயம், இதைவிட, கவுதமாலாவின் ஏலக்காய், 5 டாலர் குறைவாக உள்ளது என, இத்துறையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார். உற்பத்தி:நடப்பாண்டில், உள்நாட்டில், ஏலக்காய் உற்பத்தி, 12 ஆயிரம் டன்னாக இருக்கும் என, மதிப்பிடப் பட்டுள்ளது. எனினும், இது, கடந்த 2012ம் ஆண்டின் உற்பத்தி அளவான, 20 ஆயிரம் டன்னை காட்டிலும், மிகவும் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

**பேப்பர் கப், பாக்கு மட்டை தட்டு தயாரிப்பு குறித்து இலவச பயிற்சி**

நாமக்கல்: "ஆண்கள், பெண்களுக்கு, பேப்பர் கப், பிளேட் மற்றும் பாக்குமட்டை தட்டு தயாரித்தல் குறித்த இலவச பயிற்சி முகாம், மார்ச் இரண்டாவது வாரத்தில் துவங்குகிறது' என, இந்தியன் வங்கி சுயவேலைவாய்ப்பு நிறுவன இயக்குனர் ராஜீ தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:
நாமக்கல், இந்தியன் வங்கி சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் சார்பில், மார்ச் இரண்டாவது வாரத்தில், ஆண்கள், பெண்களுக்கான பேப்பர் கப் மற்றும் பிளேட், பாக்குமட்டை தட்டு தயாரித்தல் குறித்த இலவச பயிற்சி முகாம் துவங்குகிறது. இப்பயிற்சி, பத்து வேலை நாட்களுக்கு நடக்கிறது.
பேப்பர் கப், பிளேட் மற்றும் பாக்குமட்டை தட்டு தயாரித்தல் குறித்த தொழில் நுணுக்கம், திட்ட அறிக்கை தயாரித்தல், சந்தைப்படுத்துதல் குறித்து பயிற்சி அழிக்கப்படுகிறது. ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் மற்றும் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள், தொழில் முனைவோர் பயிற்சியில் பங்கேற்கலாம்.
இதில், 18 வயதுக்கு மேல், 45 வயதுக்குள் உட்பட்ட எழுத படிக்க தெரிந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். விருப்பமுள்ள தகுதி வாய்ந்தோர், நேரிலோ அல்லது அருகில் உள்ள இந்தியன் வங்கி கிளைகளிலோ விண்ணப்பம் பெற்று பயன்பெறலாம். மேலும், தொடர்புக்கு, 04286 221004 என்ற எண்ணிலோ, அல்லது, 89030 13980 என்ற மொபைல் ஃபோனிலோ தொடர்பு கொள்ளலாம்.
இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**புளி அறுவடைக்கான ஏலத்தொகை சரிவு :வனத்துறையினர் பெரும் அதிர்ச்சி**

நாமக்கல்: ப.வேலூர் அருகே வடகரையாத்தூர் - மோகனூர் வரையுள்ள காவிரி ஆற்றுப்படுகையில் உள்ள புளியன் மரத்துக்கான ஏலம், சில தினங்களுக்கு முன், வனத்துறை சார்பில் நடந்தது.
அந்த ஏலத்தில், 20 ஆயிரத்து, 200 ரூபாய் மதிப்பில், புளி அறுவடை செய்வதற்கான ஏலம் எடுக்கப்பட்டது. உற்பத்தி குறைவு காரணமாக, கடந்த ஆண்டைக் காட்டிலும், இந்தாண்டு புளி ஏலத்தில், 9,000 ரூபாய் சரிவு ஏற்பட்டிருப்பது, வனத்துறையினரை அதிர்ச்சியடைச் செய்துள்ளது.
வனம் மற்றும் மாநில, கிராமப்புற நெடுஞ்சாலைகளில், புளியன் மரங்கள் வளர்க்கப்படுகிறது.
வனப் பகுதியில் வளர்க்கப்படும் மரங்களை, வனத்துறையினரும், நெடுஞ்சாலை ஓரம்

வளர்க்கப்படும் புளியன் மரங்களை, நெடுஞ்சாலைத் துறையினரும் பராமரிப்பு செய்கின்றனர். அவ்வாறு வளர்க்கப்படும் புளியன் மரத்தில், ஆண்டுதோறும் மார்ச் மாதம், அறுவடை சீஸன் துவங்குகிறது.

ஜூன் மாதம் வரை, புளி அறுவடை சீஸன் நீடித்து வருகிறது. இந்தாண்டுக்கான புளி அறுவடை சீஸன், தற்போது துவங்கியுள்ளது. அவற்றை அறுவடை செய்வதற்கான டெண்டரை, மேற்குறிப்பிட்ட வனம் மற்றும் நெடுஞ்சாலைத்துறையினர் விடுகின்றனர். நாமக்கல் மாவட்டம், ப.வேலூர் அருகே வடகரை ஆத்தூர் முதல், மோகனூர் வரையுள்ள காவிரி ஆற்றுப் படுகையில், வனத்துறை சார்பில், புளியன் மரங்கள் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. அம்மரங்களில் உள்ள புளியை அறுவடை செய்வதற்கான ஏலம், மாவட்ட வன அலுவலர் பத்மாவதி மேற்பார்வையில், நாமக்கல் வனச்சரகர் சிவாஜி கணேசன் முன்னிலையில், சில தினங்களுக்கு முன் நடந்தது. அதன்படி, வடகரையாத்தூர் முதல் மோகனூர் வரையுள்ள மரத்தில், புளியன் அறுவடை செய்து கொள்ள, 20 ஆயிரத்து, 200 ரூபாய் மதிப்பில் ஏலம் எடுக்கப்பட்டது. கடந்த ஆண்டு, 30 ஆயிரம் ரூபாய் மதிப்பில், மேற்குறிப்பிட்ட பகுதியில் புளி அறுவடை செய்வதற்கான ஏலம் நடந்தது. ஆனால், இந்தாண்டு அதற்கான மதிப்பு, 9,000 ரூபாய் சரிந்திருப்பது, வனத்துறையினரை அதிர்ச்சியடைச் செய்துள்ளது. வனத்துறை அதிகாரிகள் சிலர் கூறியதாவது:

நாமக்கல் வனச்சரகத்திற்கு உட்பட்ட வடகரையாத்தூர் - மோகனூர் வரையுள்ள காவிரி ஆற்றுப் படுகையில் நடப்பட்ட புளியன் மரத்தில் அறுவடை செய்து கொள்வதற்கான ஏலம், சில தினங்களுக்கு முன் நடந்தது. மொத்தம், 20 ஆயிரத்து, 200 ரூபாய்க்கு, தனியார் மூலம் ஏலம் எடுக்கப்பட்டது. கடந்த ஆண்டைக்காட்டிலும், 9,000 ரூபாய் சரிந்துள்ளது. போதிய மழைப் பொழிவின்மையால், புளியன் மரத்தில் காய்ப்பிடிப்பு குறைந்துள்ளது. அதனால், புளி ஏலத்துக்கான விலையும் சரிந்துள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**கலப்பு தீவனம் வாங்குவோர் எண்ணிக்கை : வறட்சியால் கால்நடைகளை விற்கும் அபாயம்**

கோபிசெட்டிபாளையம்: கடும் வறட்சியால் கலப்பு தீவனம் வாங்குவோரின் எண்ணிக்கை அதிகரிப்பால். கலப்பு தீவனம் தட்டுபாடு ஏற்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம் சிறந்த விவசாய பகுதியாகும். பவானிசாகர் அணையில் இருந்து வரும் நீர், காவிரி நீர் மூலம், 2.57 லட்சம் ஏக்கர் நெல், வாழை, கரும்பு, மஞ்சள், காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகிறது. வாய்க்கால் பாசனம் ஒருபுறம் இருந்தாலும், கிணற்று நீர் பாசனமும் அதிகம்

நடக்கிறது. கடந்த சில ஆண்டாக நிலத்தடி நீர்மட்டம் குறைவதால், 24 மணி நேரமும் மின்மோட்டர் இயக்கினால் மட்டுமே சாகுபடி செய்ய முடியும். ஆனால், அதற்கேற்ப மின்சாரம் கிடைப்பதில்லை. இதனால், நிலங்கள் வறண்டு, கால்நடைகளுக்கு தேவையான புல் கிடைக்கவில்லை.

கோவை, பொள்ளாச்சி, உடுமலைபேட்டை, திருப்பூர் உள்ளிட்ட பகுதியை சேர்ந்த ஆடு வளர்ப்போர், தீவன சீஸன் நேரத்தில் கோபி உள்ளிட்ட பகுதிக்கு வருவர். இந்தாண்டு இங்கும் வறட்சி நிலவுவதால், ஆடுகளை மேய்ச்சலுக்கு எங்கு விடுவது என தெரியாமல் தவிக்கின்றனர். தீவனப்புல் பற்றாக்குறையால், கறவை மாடுகளுக்கு தவிடு, கடலை, புண்ணாக்கு, தானியங்கள், தாது உப்புகள், மொலாசஸ் ஆகியவை கொண்ட கலப்பு தீவனத்தை விவசாயிகள் உணவாக வழங்குகின்றனர். சரியான ஊட்டசத்து உணவு இருந்தால் மட்டுமே காலை, மாலையில் கறவைமாடுகள் கணிசமான அளவு பால் தர முடியும். பருவமழை ஏமாற்றம், தானிய உற்பத்தி குறைவு, தீவன பற்றாகுறை, மாடு விலை உயர்வால் பால் உற்பத்தி கணிசமாக குறைந்தது. தேசிய அளவில் பால் உற்பத்தியில் இரண்டாமிடத்தில் இருந்த தமிழகம், நான்காம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. தீவன தட்டுப்பாட்டால் சிறு விவசாயிகள் கறவை மாடுகளை விற்பனை செய்யும் நிலைக்கு வந்துவிட்டனர்.

கூட்டுறவு சங்கங்களில் விற்கப்படும் கலப்பு தீவனத்தில் புரதம், 17 முதல், 18 சதவீதமும், எண்ணெய் சத்து, 2 முதல், 2.5 சதவீதம், நார்ச்சத்து, 12 சதவீதம் இருப்பதால், கறவை மாடுகளுக்கு தேவையான ஊட்டசத்து கிடைப்பதால், இதை பயன்படுத்துவோர் அதிகரித்துள்ளனர். இதனால், கலப்பு தீவன விலை, 30 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.

அரசு கிராம பால் கூட்டுறவு சங்கங்களில், 756 ரூபாய்க்கு விற்கப்பட்ட, 60 கிலோ கலப்பு தீவன மூட்டை, 960 ரூபாய்க்கு விற்பனையாகிறது. வெளிமார்க்கெட்டில், 70 கிலோ மூட்டை கலப்பு தீவனம், 1,300 முதல், 1,400 வரை விற்பனையாகிறது. வெளி மார்க்கெட்டை விட, 100 முதல், 300 ரூபாய் வரை குறைவு என்பதால், கூட்டுறவு சங்கங்களில் விற்கப்படும் கலப்பு தீவனம் உடன் விற்றுத்தீர்ந்து, தட்டுப்பாடு ஏற்படுகிறது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகிகள் கூறியதாவது:

ஈரோடு மாவட்டத்தில் உற்பத்தியாளர்களுக்கு தேவையான கலப்பு இன்றி தட்டுப்பாடு நிலவுகிறது. ஈரோடு மாவட்ட ஆவின் நிர்வாகத்தின் கீழ் செயல்படும், தீவன ஆலை உற்பத்தி திறனை அதிகப்படுத்தி, தட்டுப்பாடு இன்றி, 50 சதவீத மானிய விலையில் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆந்திரா, கர்நாடகாவில் பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதை போல, தமிழக அரசும் லிட்டருக்கு மூன்று ரூபாய் ஊக்கத்தொகை வழங்கலாம். ஈரோடு ஆவின் ஒன்றியம் பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு, 50 பைசா வீதம் ஊக்கத்தொகை வழங்க வேண்டும். கால்நடைகள், பருத்திக்கொட்டை, புண்ணாக்கு, தீவனம் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால், கொள்முதல் விலை சத்து அடிப்படையில் கூடுதல் விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாய நிலத்தில்"ரிசார்ட்' கட்டுவதை தவிர்த்தால் நன்மை**

ஊட்டி:"நீலகிரியில், விவசாய நிலங்களில் ரிசார்ட்டு கட்டுவது தவிர்க்கப்பட வேண்டும்; சிறு விவசாயிகளுக்கு உகந்த ஆராய்ச்சிகள் அவசியம்' என, வலியுறுத்தப்பட்டது.ஊட்டி மத்திய மண் மற்றும் நீர் வள பாதுகாப்பு, ஆராய்ச்சி மையம் சார்பில், பண்ணை புதுமையாளர்கள் தின விழா, நேற்று நடந்தது. நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் டாக்டர் செல்வி வரவேற்றார். மைய தலைவர் கோலா தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக பங்கேற்ற, தென்மண்டல தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் பேசியதாவது:

கடந்த 1990ம் ஆண்டுக்கு முன்பு வரை, 90 சதவீதம் விவசாயம், அதை சார்ந்த தொழில்கள் மட்டுமே இருந்தன. அதன்பின் உற்பத்தி, தொழில் துறை வளர்ந்தது. பெருகி வரும் மக்கள் தொகை, தொழில்நுட்ப வளர்ச்சியால், விவசாய நிலங்கள் பல பிரச்னைகளை எதிர்கொண்டுள்ளன. விவசாய நிலங்களில் தொழிற்சாலைகள் கட்டப்படுகின்றன. அவற்றில் இருந்து வெளியேறும் கழிவுநீர், புகையால் நிலம், நீர், காற்று மாசுபடுகிறது. விவசாய தொழிலாளர்கள் பலர் வேலை இழந்துள்ளனர்.

தொழில்நுட்ப வளர்ச்சியை தடுக்க முடியாது. மாறாக அதனால், விவசாய தொழில் எதிர்கொள்ளும் பிரச்னைகளை சமாளிக்க வேண்டும். நிலம், நீர், மண் மாசுப்பட்டுள்ளது. பல ஆண்டுகளுக்கு முன், விவசாயிகள் ஆடு, மாடு, கோழிகளை வளர்த்தனர்; அவற்றின் கழிவுகள், மண்ணுக்கு சிறந்த அங்கக உரமாக இருந்தது. தற்போது, கால்நடை வளர்ப்பு, பராமரிப்பு குறைந்துவிட்டது. கால்நடை வளர்ப்புடன் கூடிய விவசாயத் தொழில் தான் சிறந்தது.

படித்த இளைஞர்கள், விவசாய நிலங்களில் வேலை செய்ய வேண்டும். நீலகிரியில், விவசாய நிலங்களில் ரியல் எஸ்டேட் வர்த்தகம், விவசாய நிலங்ககளில் ரிசார்ட்டு கட்டுவது, மரங்கள் வெட்டப்படுவது போன்றவை தவிர்க்கப்பட வேண்டும். இதனால், மட்டுமே எதிர்கால நன்மை

ஏற்பட்டு, விவசாயம் காக்கப்படும். விவசாயத்தில், ஆராய்ச்சிகள் அனைத்தும் பணம் படைத்தவர்களால் மட்டுமே மேற்கொள்ள முடிகிறது; சிறு விவசாயிகளுக்கு உரிய ஆராய்ச்சிகள் அவசியம். தேயிலை வாரியம் மூலம், சிறு தேயிலை விவசாயிகள், தங்கள் தோட்டங்களில் நீர் மேலாண்மை, வடிகால் பாசன முறையை மேற்கொள்ள மானிய உதவிகள் வழங்கப்படுகின்றன. தென்மாநில அளவில், இதுவரை 43 ஆயிரம் விவசாயிகள், தேயிலை வாரியத்தில் பெயர் பதிவு செய்துள்ளனர்.இவ்வாறு, அம்பலவாணன் பேசினார்.

மத்திய மண், நீர்வள பாதுகாப்பு மைய வழிகாட்டுதல் படி, விவசாய நிலங்களில் மண், நீர் மேலாண்மையை சிறப்பாக செய்த விவசாயிகள் ஈஸ்வரன் (திருச்சிகடி), மகேந்திரன், செட்டி (மேல் கவட்டி) சுலைமான் (தொட்டணி) ஆகியோருக்கு, "பண்ணை புதுமையாளர்' என்ற விருது வழங்கப்பட்டது. நிகழ்ச்சிகளை, முதுநிலை விஞ்ஞானி டாக்டர் சுந்தராம்பாள் தொகுத்து வழங்கினார். மைய விஞ்ஞானி டாக்டர் கண்ணன் நன்றி கூறினார். விழாவையொட்டி நடந்த கண்காட்சியில், மத்திய உருளைக் கிழங்கு ஆராய்ச்சி மையம், வெலிங்டன் கோதுமை ஆராய்ச்சி நிலையம், எர்த் டிரஸ்ட், டி.மணியட்டி சுய உதவிக் குழுவினரின் காட்சி அரங்குகள் இடம் பெற்றிருந்தன.

**கிழங்குகளால் குடற்புழு அபாயம் தோட்டக்கலைத்துறை எச்சரிக்கை**

தேனி: காய்கறிகளை கழுவாமல் சாப்பிடுவதால், குடற்புழு உருவாகி தொல்லை கொடுக்கும் அபாயம் உள்ளதாக, தோட்டக்கலைத்துறை தெரிவித்துள்ளது. அதிகாரிகள் கூறியதாவது: விவசாயிகள் மண்ணுக்குள் விளையும், உருளைக்கிழங்கு, காரட், முள்ளங்கி போன்றவற்றை அசுத்தமான நீரில் கழுவுகின்றனர். அசுத்தமான நீரில் காய்கறிகள் கழுவப்படும் போது, காய்கறிகளில் ""டேப்வா" எனப்படும் குடற்புழு முட்டைகள் ஒட்டிக்கொள்ளும். மிக நுண்ணிய இந்த முட்டைகள், நாம் காய்கறிகளை சாப்பிடும் போது வயிற்றுக்குள் சென்று குடற்புழுக்களை உருவாக்கி பல்வேறு தொல்லைகளை கொடுத்து விடும். எனவே மண்ணுக்குள் விளையும் எந்த கிழங்கு வகைகளை சாப்பிட்டாலும், சுத்தமான தண்ணீரில் கழுவிய பிறகே சாப்பிட வேண்டும்,என்றனர்.

**மரக்கன்று நடும் விழா**

தளவாய்புரம்:தளவாய்புரம் அருகே இளந்திரைரகொண்டானில், ராஜபாளையம் கீரீன் ஷீல்டு நிறுவனம்,பசுமை படை அமைப்பு இணைந்து, மரக்கன்றுகள் நடும் விழா

நடத்தியது.இளந்திரைகொண்டான் பசுமை படை அமைப்பின் தலைவர் பிச்சுமணி தலைமை வகித்தார். ஊராட்சி தலைவர் சீனிராஜ் முன்னிலையில் கீரீன் பீல்டு நிர்வாக அதிகாரி , மரக்கன்றுகளை நட்டார். கீரீன் பீல்டு நிறுவன களப்பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**தென்காசி பகுதியில்கருகும் மா மரங்கள்**

தென்காசி:தென்காசி பகுதியில் போதிய மழை பெய்யாததால் மா மரங்களில் பூத்திருக்கும் பூக்கள் கருகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.உலகிலேயே அதிகளவில் மாம்பழம் விளையும் நாடுகளில் பட்டியலில் இந்தியா இடம் பெற்றுள்ளது. நமது தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களில் சேலம் மாவட்டம் மாம்பழ விளைச்சலில் முதலிடமும், நெல்லை மாவட்டம் இரண்டாமிடமும் பெறுகிறது. நெல்லை மாவட்டத்தில் விவசாயம் பிரதான தொழிலாக இருக்கிறது. பருவ மழை போதிய அளவு பெய்யாததால் கடந்த சில ஆண்டுகள் விவசாய சாகுபடி பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. தென்காசி, குற்றாலம், செங்கோட்டை, புளியரை பகுதியில் அதிகளவில் மாந்தோப்புகள் உள்ளன. கடந்த மாதம் பெய்த மழையால் இப்பகுதியில் உள்ள மாமரங்களில் பூக்கள் பூத்து மிகவும் ரம்யமாக காட்சி அளித்தது. ஆனால் தொடர்ந்து மழை பெய்யாததால் பூத்துக் குலுங்கிய மாமரங்கள் கருகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. பூக்கள் மற்றும் மாம்பிஞ்சுகள் கருகி உதிர்ந்து விடுகின்றன. இதே நிலை தொடர்ந்தால் இன்னும் சில நாட்களில் மா விளைச்சல் முற்றிலும் பாதிக்கப்பட்டு விடும்.ஏற்கனவே கடந்த மூன்று ஆண்டுகளாக கார் மற்றும் பிசான நெல் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது மா விளைச்சலும் பாதிக்கப்படுவதால் விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

**ராவுத்தப்பேரியில் விவசாய பயிற்சி முகாம்**

தென்காசி:ராவுத்தப்பேரியில் அட்மா விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது.கடையம் வட்டாரம் ராவுத்தப்பேரியில் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது. முகாமிற்கு வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகர் தலைமை வகித்து பேசும் போது, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பற்றியும், நெற்பயிரை தாக்கக் கூடிய நன்மை செய்யும் பூச்சிகள், தீமை செய்யும் பூச்சிகள் பற்றியும் விளக்கினார். பஞ்.,தலைவர் மாடசாமி வாழ்த்தி பேசினார். உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் சுபசெல்வி திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றி விளக்கம் அளித்தார்.

வேளாண்மை அலுவலர் வளர்மதி நெல்லில் ஒருங்கிணைந்த உர நிர்வாகம் பற்றியும், துணை வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன், ஒருங்கிணைந்த நீர் நிர்வாகம் பற்றியும் பேசினர். பயிற்சி குறித்து விவசாயிகளுக்கு தேர்வு நடத்தப்பட்டது. இதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.உதவி வேளாண்மை அலுவலர்கள் திரவியம், ஜெகதீசன், கிருஷ்ணமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர் கமல்ராஜன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர் இசைபிரியா, தொழில் நுட்ப வல்லுநர்கள் பொன் ஆசீர், சந்திரன் ஆகியோர் செய்திருந்தனர்.

**பனைமரம் ஏறும் கருவியை பயன்படுத்தி பனைமரம் ஏறிய குமரி அனந்தன்**

கன்னியாகுமரி: தமிழ்நாடு காந்தி பேரவை மற்றும் சென்னை சி.பா. நிறுவனம், மெட்ராஸ் ஐ.ஐ.டி நிறுவனம் இணைந்து அறிமுகப்படுத்திய பனைமரம் ஏறும் கருவியை பயன்படுத்தி கன்னியாகுமரியில் குமரி அனந்தன் பனைமரம் ஏறினார். கற்பகதரு என்று அழைக்கப்படும் பனைமரம் அனைத்து இடங்களிலும் எல்லா கால சூழ்நிலையிலும் வளரும் மரம். பனைமரத்தில் இருந்து நுங்கு, பதநீர், பனைஓலை, பனங்கம்பு, பனங்காய், என அனைத்தும் பொதுமக்களுக்கு பயன்படும் பனைமரம் தற்போது, குறைந்து வருகிறது. இந்தியா முழுவதும் 8 கோடி பனைமரங்களில் தமிழ்நாட்டில் மட்டும் 5 கோடி பனைமரங்கள் இருந்துள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் படிப்படியாகக் குறைந்து தற்போது, 3 கோடி பனைமரங்கள் இருப்பதாக தெரிகிறது. பனைமரம் ஏறுவதற்கு ஆட்கள் இல்லாததாலும், பனைமரம் ஏறுவது கடினமான தொழில் என்பதாலும் பலர் பனைமரம் ஏறும் தொழிலை விட்டு மாற்று தொழிலுக்கு செல்வதால் தமிழ்நாட்டில் பனைமரம் ஏறும் தொழில் குறைந்து வருகிறது. பனைமரம் ஏறும் தொழிலை எளிதாக்கும் வகையில் தற்போது, கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இக்கருவியில் இருக்கும் பல்வேறு நடைமுறை சிக்கலால் இக்கருவியை முழுமையாக பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. இந்நிலையில் மெட்ராஸ் ஐ.ஐ.டி., நிறுவனம் தற்போது கண்டுபிடித்துள்ள பனைமரம் ஏறும் கருவியை நேற்று கன்னியாகுமரியில் பொதுமக்கள் முன்னிலையில் செயல்படுத்தி காட்டியது. இதற்காக மெட்ராஸ் ஐ.ஐ.டி.,நிறுவன பேரா. கோபாலகிருஷ்ணன், பனைதொழிலாளர் நல வாரிய முன்னாள் தலைவர் குமரி அனந்தன் ஆகியோர் தலைமையில் கன்னியாகுமரியிலுள்ள தனியார் தங்கும் விடுதியில் முன்னால் இருந்த ஒரு பனைமரத்தில் இக்கருவி அறிமுகப்படுத்தப்பட்டது.

இக்கருவியை பயன்படுத்தி சிறிது உயரம் பனைமரத்தில்ஏறி குமரி அனந்தன் அறிமுகப்படுத்தினார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது: தற்போது பனைமரம் ஏறும் தொழில் மிகவும் குறைந்து வருகிறது. இத்தொழிலை மேம்படுத்த வசதியாக அனைவரும் எளிதாக பனைமரம் ஏறும் வகையில் ஏற்கனவே இதுபோன்ற கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அவற்றிலுள்ள குறைகளை நிவர்த்தி செய்து மெட்ராஸ் ஐ.ஐ.டி., நிறுவனம் இக்கருவியை தற்போது, சந்தைப்படுத்தி உள்ளது. இந்த கருவியின் மூலம் பனை மற்றும் தென்னை மரங்களில் எளிதாக ஏற முடியும். மேலும், ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எளிதாக கொண்டு செல்லலாம். இக்கருவியின் விலை தற்போது ரூ.2 ஆயிரத்து 800 ஆக உள்ளது. இந்த கருவியை விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்க அரசை வலியுறுத்துவோம். இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

2.03.2013 A.M

---

## பட்டாணி காலிபிளவர் விலை சரிவு



ஊட்டி: நீலகிரியில் உருளைக்கிழங்கு, பச்சைப் பட்டாணி, டபுள் பீன்ஸ், கேரட், பீட்ரூட், வெள்ளை பூண்டு உட்பட பல்வேறு காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படும் காய்கறிகள் வெளி மாவட்டங்கள், வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.இந்நிலையில், ரூ.100 முதல் ரூ.150 வரை விற்கப்பட்ட பச்சைப் பட்டாணி தற்போது ரூ.30 ஆக விலை குறைந்துள்ளது. இதனால் பச்சை பட்டாணி பயிரிட்ட விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இதேபோல் காலிபிளவர் கடந்த மாதம் வரை கிலோ ஒன்று ரூ.20 முதல் ரூ.30 வரை விற்கப்பட்டு வந்தது. தற்போது ரூ.15 முதல் 20 வரையே விற்கப்படுகிறது.காய்கறிகளை மேட்டுப்பாளையம் மண்டிகளுக்கு கொண்டு சென்று விற்பனை செய்ய வாகன வாடகை, ஏற்றுகூலி மற்றும் இறக்கு கூலி போன்றவைகள் வழங்க முடியாத நிலையில், சாலையோர வியாபாரிகளுக்கு விவசாயிகள் விற்பனை செய்துவிட்டு செல்கின்றனர்.

## விவசாயிகளுக்கு ஆலோசனை 60 நாளில் பூக்கும் சாமந்தி சாகுபடியால் அதிக லாபம்

காரைக்கால், : காரைக்காலில் 60 நாளில் பூக்கும் சாமந்தி மலர் சாகுபடி குறித்த வயல்தின விழா நேற்று நடைபெற்றது. காரைக்கால் மாவட்ட வேளாண்துறை சார்பில், வரிச்சிக்குடியை சேர்ந்த விவசாயி ராஜேந்திரன் வயலில், மலர் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகளுக்கு சாமந்தி மலர் மகசூல் குறித்து விளக்கமளிக்கபட்டது. சாமந்தி மலர் சாகுபடி குறித்து, வேளாண் அலுவலர்(தோட்டக்கலை) ஜெயந்தி விளக்கினார். கூடுதல் வேளாண் இயக்குனர் மதியழகன்

சாமந்தி மலர் சோதனை முறையில், முதன்முறையாக வரிச்சிக்குடி ராஜேந்திரன் என்பவரது அரை ஏக்கர் நிலத்தில் பயிர் செய்யப்பட்டுள்ளது. அவருக்கு வழங் கிய விதை மற்றும் கன்றை நல்ல முறையில் பராமரித்து அதிக மகசூலை ஈட்டியுள்ளார். இவரைப் போல், யார் சாகுபடி செய்ய முன்வந்தாலும் அவர்களுக்கும் மாவட்ட வேளாண் துறை விதை மற்றும் மலர் கன்றுகளை வழங்கி உதவி செய்யும், என்றார்.

மாவட்ட இணை வேளாண் இயக்குனர் முகமது உஸ்மான், துணை வேளாண் இயக்குனர் ராஜேந்திரன் ஆகியோர் கூறியது: சாமந்தி மலர் தற்போது வணிக ரீதியாக மிகவும் பிரபலமடைந்து வருகிறது. அதாவது 60நாளில் பூக்கும் பருவத்தை எட்டுவதால், விவசாயிகள் நல்ல லாபத்தை ஈட்ட முடியும். எளிமையான சாகுபடி, மாறுபட்ட தட்பவெட்ப நிலையிலும் வளரும் தன்மை கொண்டது. ஆண்டு முழுவதும் வளர்ந்து பூ தரக்கூடியது. நீண்ட நேரம் வாடாமல் இருக்கும் மலர். இதனை பிற விவசாயிகளும் பயிர் செய்ய முன்வர வேண்டும் என்றனர். முடிவில் வேளாண் அலுவலர் சுபாஆனந்தி நன்றி கூறினார்.

## கரூர் மாவட்டத்தில் தேவையான அளவு உரங்கள் கையிருப்பில் உள்ளது வேளாண்துறை தகவல்

கரூர், : கரூர் மாவட்டத்தில தேவையான அளவு உரங்கள் கையிருப்பில் உள்ளதாக வேளாண்மைத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட வேளாண்மைத்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கரூர் மாவட்டத்தின் சராசரி மழையளவு 652.2 மிமீட்டராகும். கடந்த மாதத்தில் 7.28மிமீ என்ற இயல்பான மழையளவை காட்டிலும் இரண்டு மடங்கு கூடுதலாக 17.25மிமீ மழை பெய்துள்ளது. கடந்த மாதம் வரை நெல் 10,990 எக்டேரிலும், சிறுதானியம் 9,654 எக்டேரிலும், பயறு வகைகள் 7,338 எக்டேரிலும், எண்ணெய் வித்துக்கள் 8,370 எக்டேரிலும், கரும்பு 6,147 எக்டேரிலும் பயிரிடப்பட்டுள்ளது. அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் 12 டன் பயறு விதைகளும், 8,770 டன் எண்ணெய் வித்துக்களும் இருப்பில் உள்ளது. மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உரக்கடைகளில் 740 டன் யூரியா, 441 டன் டிஏபி, 629 டன் பொட்டாஷ், 1,456 டன் காம்ப்ளக்ஸ் உரம் இருப்பில் உள்ளது.

தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைப்பதில் 36 எக்டேர் இலக்கில் 24 எக்டேர் சாதனை அடையப்பட்டுள்ளது. தேசிய வேளாண்மை வளர்ச்சி

திட்டத்தின் பிற இனங்களான திருந்திய நெல் சாகுபடி செயல் விளக்கத்திடல், 100 சதவீத மானியத்தில் துவரை நடவு செயல் விளக்கத்திடல், 50 சதவீத மானியத்தில் துவரை நடவு செயல்விளக்க திடல், நீர் எடுத்துச் செல்லும் குழாய்கள் அமைத்தல், தீவிர உரம் தயாரித்தல் ஆகிய திட்டங்களிலும் நூறு சதவீதம் சாதனை பெற்றுள்ளது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் 50 சதவீத மானியத்தில் அனைத்து விவசாயிகளுக்கும் பழக்கன்றுகள், காய்கறி விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன. தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் துல்லிய பண்ணையத்திட்டம் மற்றும் இயந்திர மயமாக்குதல் திட்டங்களில் 100சதவீத சாதனை அடையப்பட்டுள்ளது.தமிழ்நாடு நீர், நிலவள திட்டத்தின்கீழ் 5 நீர் அறுவடை கட்டுமான பணி நிறைவு பெற்றுள்ளது. தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்ட மானியத்தில் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெல் கொள்முதல் செய்ய பஞ்சாயத்து அளவில் வேளாண் விற்பனை நிலையங்கள் ராஜீவ் காந்தி பஞ்சாயத்துராஜ் சங்கம் தீர்மானம்

புதுக்கோட்டை,: புதுக்கோட்டை மாவட்ட ராஜீவ் காந்தி பஞ்சாயத்து ராஜ் சங்கத்தின் சார்பில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் சங்கிலிமுத்து தலைமை வகித்தார். முன்னாள் இளைஞர் காங்கிரஸ் தலைவர்கள் திருப்பதி, ரவிக்குமார், குமாரசாமி, சேசு, தொகுதி தலைவர் ராஜகோபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில், புதுக்கோட்டை மாவட்டத்தில் அறுவடையாகி இருக்கும் நெல்லை விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகள் தவித்துக் கொண்டிருக்கின்றனர். எனவே விவசாயிகளிடம் நெல்லை கொள் முதல் செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண் டும். விவசாயிகள் கடும் மின்வெட்டிலும் தண்ணீர் பற்றாக்குறையிலும் விளைவித்த நெல் அறுவடைக்கு முன்பு ஒரு மூட்டை ரூ.1100 வரை விற்பனையானது. ஆனால் தற்போது ரூ.650க்கு வியாபாரிகள் கேட்கின்றனர். இதனால் விவசாயிகள் கடும் இழப்புக்கு ஆளாகின்றனர்.

எனவே தமிழக அரசு பஞ்சாயத்து அளவில் வேளாண் விற்பனை நிலையங்களை திறக்க வேண்டும். விவசாயிகளின் நலன்கருதி கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2500 வழங்க தமிழக அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும். தமிழகத்தில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, விபத்து போன்ற சம்பவங்களுக்கு காரண மான மதுவை ஒழிக்க வேண்டும். புதுக் கோட்டை-தஞ்சாவூர் செல்லும் சாலையை பிரதமரின் தங்க நாற்கர நான்கு வழிச் சாலையாக மாற்ற கப்பல்துறை அமைச்சரிடம்

கோரிக்கை வைப்பது. மாவட்டத்தில் 100 நாள் வேலை திட்டத்தினை நடத்திட வேளாண் விரிவாக்க பணியாளர்களை தமிழக அரசு நியமிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் ஆறு முகம், தண்டபாணி, கணேசன், சிதம்பரம், மாண வர் அணி தலைவர் கேச வன், லூயிஸ், குமரேசன், சிவக்குமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். நகரத் தலைவர் குமார் அனைவரையும் வரவேற் றார். வட்டார தலைவர் தவமணி நன்றி கூறினார்.

## விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் பணி விரைந்து முடிக்க வேண்டும் வருவாய் நிர்வாக ஆணையர் உத்தரவு

நாகை, : நாகை மாவட்டத்தில் விவசாயிகளுக்கான வறட்சி நிவாரண பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாகை வட்டம் சிக்கல் தொடக்க வேளாண். கூட்டுறவு வங்கி, நாகூர்- பாலையூர் தொடக்க வேளாண். கூட்டுறவு வங்கி உள்ளிட்ட வங்கிகளில் தமிழக அரசின் வறட்சிக்கான நிவாரணம் வழங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. வருவாய் நிர்வாக ஆணையர் டாக்டர் ஸ்ரீதர் நேற்றுமுன்தினம் பணிகளை ஆய்வு செய்தார். அப்போது அவர் அலுவலர்களிடம் கூறியதாவது:

நாகை மாவட்டத்திற்கு வறட்சி நிவாரணமாக ரூ.272 கோடியே 20 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிவாரணம் வழங்கும் பணியை துரிதமாக முடிக்க வேண்டும். அரசு ஒதுக்கீடு செய்துள்ள தொகையை வங்கி கணக்குகளில் வரவு வைக்கும் பணிகளை ஓரிரு நாட்களில் முடிக்க வேண்டும். வருவாய்த்துறையினர், கூட்டுறவு துறையினர், வேளாண். துறையினர் இணைந்து உடனடியாக பணிகளை முடிக்க வேண்டும். விவசாயிகளின் வங்கி கணக்குகளில் வரவு வைக்கப்படும் தொகையை விவசாயிகள் எப்போது வேண்டுமானாலும் பெற்று கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார். பின்னர் கலெக்டர் அலுவலகத்தில் நிவாரண பணிகளை விரைவுபடுத்துவது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் கலெக்டர் முனுசாமி, டி.ஆர்.ஓ. ஆசியா மரியம், ஆர்.டி.ஓ. மணிகண்டன், வேளாண். இணை இயக்குனர் ராஜேந்திரன், கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் ராஜேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## பால் மாடுகள் பராமரிக்க மாதம் ரூ5 ஆயிரம் வழங்க வேண்டும்

திருச்சி, : ஆடு, பால் மாடுகளை பராம ரிக்க மாதம் ரூ.5ஆயிரம் வழங்க வேண்டும் என கிணற்று பாசன விவசா யிகள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

கிணற்றுப் பாசன விவசாய பாரதீய கிசான் சங்கம் விவசாயிகள், கலெக்டர் ஜெயஸ்ரீயிடம் அளித்துள்ள கோரிக்கை மனு:

கிணற்று பாசன விவ சாயிகள் சுமார் ரூ.15லட் சம் வரை செலவு செய்து கிணறு வெட்டி மின் மோட்டார் பொருத்தி மின் இணைப்பு பெற்று இருந்தோம். ஆனால் மின் சாரம் வரும் நேரங்களில் காத்திருந்து நீர் இறைத்து விவசாயம் செய்யும் நிலை பரிதாபமாக உள்ளது.

மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் கிணற்றில் இருந்த தண்ணீரை நம்பி வங்கிகள், கூட்டுறவு வங் கிகள் மற்றும் தனி யார் களிடம் கடன் வாங்கி மஞ்சள் உள்ளிட்ட பயிர் கள் சாகுபடி செய்தி ருந் தோம். இதில் தண்ணீர் இல்லாமல் அனைத்து பயிர்களும் கருகி விட்டது. இதனால் விவசாயிகள் நிலைமை மிகவும் பரிதா பமாக உள்ளது.

எனவே விவசாயிகள் வங்கிகள், கூட்டுறவு வங்கி களில் வாங்கிய விவசாயம் சார்ந்த அனைத்து கடன் களையும் தள்ளுபடி செய்ய வேண்டும். மீண் டும் மழை பெய்து விவசா யம் செய்து அறுவடை செய்யும் வரை விவசா யிகள் வளர்க்கும் ஆடுகள், பால் மாடுகளை பராம ரிக்க விவசாய குடும்பம் ஒன்றுக்கு ரூ.5ஆயிரம் மாதம், மாதம் வழங்கி தற்கொலையில் இருந்து காப்பாற்ற வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித் திருந்தனர்

## வேளாண் திட்டங்களை விவசாயிகளுக்கு?தினமும் தெரிவிக்க?வேண்டும் அரசு கூடுதல் செயலர் தகவல்

திண்டுக்கல், : வேளாண் துறை  திட்டங்கள் குறித்து தினமும் விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும் என அரசு கூடுதல் செயலாளர் (வேளாண்) வாசுகி தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் நடைபெற்று வரும் திட்டம் மற்றும் வளர்ச்சி பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் திண்டுக்கல்லில் நடைபெற்றது. கலெக்டர் வெங்கடாசலம் முன்னிலை வகித்தார். வளர்ச்சி பணிகளை அரசு கூடுதல் செயலாளர் (வேளாண்) வாசுகி ஆய்வு செய்தார்.

பின் அவர் கூறியதாவது: அரசு அலுவலகங்களில் காலி பணியிடங்கள் மற்றும் இதர தேவைகளை எடுத்துரைக்கும் பட்சத்தில் அவைகள் அனைத்தும் அரசுக்கு தெரிவிக்கப்பட்டு நிவர்த்தி செய்யப்படும். ஒவ்வொரு துறையிலும் போதுமான பணியாளர்கள் இருக்கும் பட்சத்தில், அத்துறையில் உள்ள அனைத்து திட்டங்களும் எவ்வித தொய்வுமின்றி நடைபெற ஒவ்வொரு பணியாளர்களுக்கும் பணிகளை பகிர்ந்தளித்து திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். இலக்கை

அடையும் அலுவலர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கப்படும்.

வேளாண் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தையும் விவசாயிகளுக்கு தினமும் தெரிவிக்க வேண்டும்.

அதேபோன்று மாவட்டத்தில் உள்ள பருவநிலை குறித்து விவசாயிகள் தெரிந்து கொள்ளும் வகையில் ரேடியோ, நாளிதழ்கள் மூலம் தினமும் தெரிவிக்க வேண்டும். பயிர்கள் தொடர்பான விளக்கப்படங்களை சேகரித்து விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

மாவட்ட  வருவாய் அலுவலர் மனோகரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ரமேஷ் உட்படப பலர் கலந்து கொண்டனர்.